**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 03.02.2026 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகள் இணைந்து செயல்படும் போது, அது, உலக மக்களுக்கு பயன் அளிப்பதாக இருக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம், நீடித்த பொறுமையின் விளைவு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரிக் குறைப்பு, இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப் பேரவையில், வரும் 12ஆம் தேதி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என்று, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்துள்ளார்.

---

மோடி 1 (16)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு தற்போது, அமெரிக்காவின் வரி 18 சதவிகிதமாக குறைக்கப்படும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் திரு.

டொனால்ட் ட்ரம்புடன் தொலைபேசியில் உரையாடிய பின்னர், அவர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில் வரிக் குறைப்பு குறித்து தெரிவித்துள்ளார். தனது அன்பு நண்பர் அதிபர் ட்ரம்புடன் பேசியது மிகவும் அருமையான தருணம் என்றும், 2 பெரிய பொருளாதாரம் மற்றும் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகள் இணைந்து செயல்படும் போது, அது, உலக மக்களுக்கு பயன் அளிக்கிறது என்றும், பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்புக்கான மகத்தான வாய்ப்புகள் திறக்கப்படுகிறது என்றும், பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தியாவுடனான அமெரிக்காவின் அற்புதமான உறவு, எதிர்காலத்தில் இன்னும் வலுவாக இருக்கும் என்று, அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். இருநாடுகளும், ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொண்டு இருப்பதாகவும், அமெரிக்கா, பரஸ்பர வரியை 25 சதவிகிதத்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கும் என்றும், திரு. டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மோடி 2 (6)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தனது சிறந்த நண்பர்களில் ஒருவர் என்றும், இந்தியாவின் சக்தி வாய்ந்த, மற்றும், மரியாதைக்குரிய தலைவர் எனவும், திரு. ட்ரம்ப் தமது ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். தானும், பிரதமர் மோடியும் செயல்களை சிறப்பாக செய்து முடிப்பவர்கள் என்றும், இது பெரும்பாலானவர்களுக்கு பொருந்தும் என்று சொல்ல முடியாது எனவும், திரு. டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------

*மோடி -என்டிஏ 1 (9)*

அமெரிக்காவுடனான இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம், நீடித்த பொறுமையின் விளைவு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இன்று நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றிய அவர், இந்த வர்த்தக ஒப்பந்தம், சாதகமான பொருளாதார சூழலை உருவாக்கி உள்ளது என்றும், உலகளாவிய வர்த்தகப் பேச்சு வார்த்தைகளில், அரசின் நிலையான, மற்றும், திட்டமிட்ட அணுகுமுறையை பிரதிபலிக்கிறது என்றும் குறிப்பிட்டார். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

(வாய்ஸ்)

*மோடி -என்டிஏ 2 (14)*

(வாய்ஸ்)

எதிர்கட்சிகள், அமெரிக்காவின் வரிவிதிப்பு குறித்து விமர்சனம் செய்தாலும், அரசு பொறுமையாக இருந்ததன் விளைவுகள் இப்போது தெளிவாக தெரிவதாகவும், பிரதமர் என்டிஏ நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பேசுகையில் தெரிவித்தார். தற்போது, உலகம் இந்தியாவை நோக்கி நகர்வது அதிகரித்து வருவதாகவும், பிரதமர் தெரிவித்தார். இந்த கூட்டத்தின் போது, இந்திய-அமெரிக்காவின் முக்கிய

வர்த்தக ஒப்பந்தத்திற்காக, நாடாளுமன்றஉறுப்பினர்கள், பிரதமர் திரு. நரேந்திர மோடியை பாராட்டினார்கள். இந்த கூட்டத்தில், பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின், மத்திய அமைச்சர்கள், திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜே.பி. நட்டா, திரு. அஷ்வினி வைஷ்ணவ், திரு. பூபேந்தர் யாதவ், ஜனசக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிராக் பாஸ்வான், அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தம்பிதுரை,மற்றும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

-----------------------------

*நிர்மலா சீத்தாராமன்* 1 (17)

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரிக் குறைப்பு, இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய பொருட்களுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா 18 சதவிகிதமாக குறைத்து இருப்பதற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்புக்கும், நன்றி தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். இத்தகைய நடவடிக்கைகள், இருபெரும் ஜனநாயக நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு பயன் அளிக்கும் என்றும், திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி வெளியிட்டுள் சமூக ஊடகப் பதிவில், இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம், பொருளாதார உறவுகளை மேம்படுத்த உதவும் என்றும், புதிய வர்த்தக வாய்ப்புகள் உருவாகும் என்றும், தெரிவித்துள்ளார்.

இந்தியா-அமெரிக்கா இடையே, வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ப்பட்டு இருப்பதாக, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார். சிறு-

*நிர்மலா சீத்தாராமன்* 2 (6)

குறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், இளைஞர்கள், விவசாயிகள் உட்பட, பல்வேறு தரப்பினருக்கும் இது பெரிதும் பயன் தருவதாக உள்ளது என்று, தமதுசமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை உயர்த்தி இருப்பதாகவும், டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

----------------------------

*நட்டா* (9)

இந்தியா-அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம், வரி சார்ந்த தகவல்கள் உள்ளிட்ட முழு விவரங்களை, மத்திய அரசு விரைவில் வெளியிடும் என்று மாநிலங்களைவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார். இந்த விவரங்களை

வெளியிட வேண்டும் என்று கோரிக்கை வைத்து, எதிர்கட்சியினர் அவையில் முழக்கமிட்டதை தொடர்ந்து, இதனை தெரிவித்த திரு. ஜே.பி.நட்டா, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சியினர், இதுகுறித்து விவாதிக்கக் கோரி பிரச்சனை எழுப்புவது, ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று குறிப்பிட்டார்.

-----------------------------

*மக்களவை* (12)

மக்களவையில், விதிமுறைகளை மீறி நடந்து கொண்டதற்காக, திரு. மாணிக்கம் தாக்கூர், திரு. அம்ரிந்தர் சிங் ராஜா, திரு. கிரண் குமார் ரெட்டி, திரு. வெங்கடேசன் உள்ளிட்ட 8 எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளனர். இதற்கிடையே, நாடாளுமன்ற குழுக் கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் மீது இடையூறு ஏற்படுத்தியதற்காக, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தியை குற்றம் சாட்டினார். அவையின் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் திரு. ராகுல் காந்தியின் நடத்தை, விவாதத்தில் பங்கேற்க விரும்பும் மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் நேரத்தை வீணடிக்கும் வகையில் உள்ளது என்றார்.

-----------------------------

*உச்சநீதிமன்றம் (18)*

தரவுகளை பகிர்தல் என்ற பெயரில், நாட்டு மக்களின் தனிநபர் உரிமை மீறலில், சமூக ஊடகங்கள் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என்று, உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. தனிநபர் கொள்கை மீறலுக்காக 213 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதை எதிர்த்து, மெட்டா, வாட்ஸ் அப் உள்ளிட்ட ஊடகங்கள் தாக்கல் செய்துள்ள மனுவை விசாரித்த தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, வரும் 9ஆம் தேதி இதற்கான இடைக்கால ஆணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. மத்திய அரசு சார்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் திரு. துஷர் மேத்தா, வர்த்தகப் பயன்பாட்டிற்காக மக்களின் தனிப்பட்ட தரவுகள் பகிரப்படுவதாக குற்றம் சாட்டினார். அப்போது, தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த், இது தொடர்பான அரசியல் சாசன உத்தரவை பின்பற்ற முடியாவிட்டால், சம்பந்தப்பட்ட ஊடகங்கள், இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று, நாட்டு மக்களின் தனிநபர் சுதந்திரத்தில், எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்றும் குறிப்பிட்டார். சமூக ஊடகங்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், சமூக ஊடகங்களில் பகிரப்படும் அனைத்து தகவல்களும் மிகவும் பாதுகாப்பானவை என்றும், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கூட, அதன் உள்ளடக்கத்தை பார்க்க முடியாது எனவும் விளக்கம் அளித்தனர்.

---------------------------

*புதுச்சேரி சட்டப் பேரவை (10)*

புதுச்சேரி சட்டப் பேரவையில், வரும் 12ஆம் தேதி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என்று, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்துள்ளார். சட்டப் பேரவை வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 15ஆவது புதுச்சேரி சட்டப் பேரவையின் 6ஆவது கூட்டத் தொடரின் 3ஆம் பகுதி, இம்மாதம் 12ஆம் தேதி வியாழன் கிழமை காலை 9.30 மணிக்கு தொடங்கும் என்று தெரிவித்தார். அன்றைய தினம், 2026-27ஆம் நிதியாண்டிற்கான இடைக்கால வரவு-செலவு அறிக்கையை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தாக்கல் செய்வார் என்றும் கூறினார். அவர் மேலும் கூறுகையில்......

(வாய்ஸ்-செல்வம்)

-----------------------------

*அண்ணா நினைவு தினம் (10)*

பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாள், இன்று, புதுச்சேரி அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி, ஒதியஞ்சாலை சந்திப்பில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக்

கொறடா திரு. ஏ.கே.டி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. கே.எஸ்.பி. ரமேஷ், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. லட்சுமி காந்தன், திரு. பிரகாஷ்குமார் ஆகியோரும், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------------

*வானிலை* (6)

லட்சத் தீவு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, அடுத்த 2 நாட்களுக்கு, தென்தமிழகம், மற்றும், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்காலிலும், லேசான மழை பெய்யக் கூடும் என்றும், இதர தமிழகப் பகுதிகள், மற்றும், புதுச்சேரியில், வறண்ட வானிலையே நிலவக் கூடும் எனவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------------------------

*கிரிக்கெட்* (5)

வதோதராவில் நடைபெற்று வரும் மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் எலிமினேட்டர் போட்டியில், குஜராத் அணி, டெல்லி அணியை எதிர் கொள்கிறது. இதில் வெற்றி பெறும் அணி, நாளை மறுநாள் நடைபெறும் இறுதிப் போட்டியில், பெங்களூரு அணியுடன் மோதுகிறது.

-----------------------------

*நித்யானந்தராய் (12)*

நாடு முழுவதும் 28 மத்திய ஆயுதக் காவல் படை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருவதாக, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்தராய் இன்று மக்களவையில் தெரிவித்தார். கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், தற்போதைய சவால்கள், எதிர்காலத் தேவைகள் போன்றவற்றை கருத்தில் கொண்டு, அதிநவீன தொழில்நுட்பப் பயிற்சிகள், ஆயுதப் படையினருக்கு வழங்கப்படுவதாக தெரிவித்தார். இத்தகைய சிறப்புப் பயிற்சிகள் மூலம், நக்சல் தீவிரவாதம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அகற்றப் பட்டுள்ளதாகவும், அடுத்த மாதம் இறுதிக்குள் தீவிரவாதம் வேரோடு களையப்படும் என்றும் தெரிவித்தார். நவீன தொழில்நுட்ப பயிற்சிகளால் தீவிரவாத தடுப்பு செயல்பாடுகள் வலுப்பெற்று, உள்நாட்டுப் பாதுகாப்பு உறுதி செய்யப் பட்டுள்ளதாகவும் திரு. நித்யானந்தராய் தெரிவித்தார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகள் இணைந்து செயல்படும் போது, அது, உலக மக்களுக்கு பயன் அளிப்பதாக இருக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தம், நீடித்த பொறுமையின் விளைவு என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரிக் குறைப்பு, இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப் பேரவையில், வரும் 12ஆம் தேதி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என்று, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**